**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.413 /2018**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12–ம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.10.2023 | தந்தை/கணவர் பெயர்: | பூவாலி நாட்டார் |
| பெயர்: | சண்முகராஜ் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | வாணகிரி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 53 /2023 |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை : 12.10.2023.</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

22.11.1967 ஆம் தேதியிட்ட தாவா சொத்திற்கு எனது தகப்பனார் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 07.08.2018 தேதியிட்ட 1–ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட செட்டில்மண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1–ம் பிரதிவாதி ரெங்கநாதன் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அண்ணனின் மூத்தமகன் ஆவார். வழக்கு சொத்து சம்பந்தமாக எனக்கும் 1–ம் பிரதிவாதிக்கும் தான் கருத்துவேறுபாடு இருந்து வருகிறது என்றால் சரிதான். 2–ம் பிரதிவாதிக்கு எதிராக எவ்வித கருத்துவேறுபாடும் இல்லை என்றால் சரிதான். 2–ம் பிரதிவாதிக்கு எதிராக நான் எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். எவ்வித பரிகாரமும் 2–ம் பிரதிவாதிக்கு எதிராக கோரப்படாததால் 2–ம் பிரதிவாதி இவ்வழக்கின் அவசியமற்ற தரப்பினர் என்றும் அதனாலேயே இவ்வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

1–ம் பிரதிவாதி தோன்றா தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்.

மறுவிசாரணை இல்லை.